//தனி கவனம் //　　　　　　　　　　// மிக மிக அவசரம் //

**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**

ந.க.எண்.3230/அ4/2024　　　　நாள்.12.08.2024

பொருள்　பள்ளிக் கல்வி – மேல்நிலைக் கல்வி – 01.08.2024 – அன்றைய நிலவரப்படி வேலூர் மாவட்டத்திலுள்ள அரசு/நகராட்சி மேல்நிலைப் பள்ளிகளிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் முதுகலை ஆசிரியர் பணியிடங்கள் நிர்ணயம் – செய்தல் – தொடர்பாக

பார்வை

1. அரசாணை எண்.525 பள்ளிக் கல்வி (டி1) துறை நாள்.29.12.1997
2. அரசாணை எண்.46 பள்ளிக் கல்வி(க்யு2) துறை நாள்.14.05.2004
3. அரசாணை எண்.231 பள்ளிக் கல்வி (சி2) துறை நாள்.18.08.2010
4. அரசாணை எண்.217 பள்ளிக் கல்வி ப.க.5(1) துறை நாள்.20.06.2019
5. அரசாணை எண்.176 பள்ளிக் கல்வி ப.க.5(1) துறை நாள்.17.12.2021
6. அரசாணை எண்.12 பள்ளிக் கல்வி ப.க.5(1) துறை நாள்.17.12.2021
7. சென்னை.6. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.052348/டபிள்யு.2/இ3/2024 நாள்.07.08.2024

-----

பார்வை (1)இல் காண் அரசாணை எண்.525இன்படி மாணாக்கர்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு ஆசிரியர் மாணவர் விகிதாச்சாரத்தின் அடிப்படையில் பணியாளர் நிர்ணயம் செய்யப்படுகிறது. கடந்த 2023 – 2024 ஆம் ஆண்டில் 01.08.2023 நிலவரப்படி முதுகலை ஆசிரியர்கள் பணியிடங்கள் மாணவர்களின் எண்ணிக்கைகேற்ப பணியாளர் நிர்ணயம் (Staff Fixation) செய்யப்பட்டது. அதே போன்று நடப்பு கல்வியாண்டிலும் 01.08.2024 நிலவரப்படி மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் முதுகலை ஆசிரியர்கள் பணியிடங்கள் நிர்ணயம் செய்தல் சார்பாக கீழ்காணும் அறிவுரைகளை பின்பற்றி பணியாளர் நிர்ணயம் செய்திட அரசு/நகராட்சி மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியருக்கு தெரிவிக்கப்படுகிறது.

பார்வை (2)இல் காண் அரசாணை 46இன் படி ஆசிரியர்கள் பாடவேளைகள் அடிப்படைகள் பணியாளர் நிர்ணயம் செய்யப்படுகிறது. அதாவது தமிழ் மற்றும் ஆங்கிலம் பாட ஆசிரியர்களுக்கு ஒரு பிரிவிற்கு 4 பாட வேளைகள் என வாரத்திற்கு குறைந்தபட்சம் 24 பாடவேளைகள் என வாரத்திற்கு குறைந்தபட்சம் 28 பாடவேளைகள் என்ற அடிப்படையிலும் பணியாளர் நிர்ணயம் செய்யப்படுகிறது.

பார்வை (4)இல் காண் அரசாணை எண்.217 இல் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

<u>பாடவேளைகள் கணக்கிடுதல்</u>

ஆசிரியர் பணியிடங்கள் நிர்ணயம் செய்யும்போது ஓராசிரியருக்கு, வாரத்திற்கு குறைந்தபட்சம் 28 பாடவேளைகள் ஒதுக்கீடு உள்ளதா என்பதையும் கணக்கில் கொள்ள வேண்டும். மேல்நிலை வகுப்புகளில் மொழிப்பாடத்தில் வாரத்திற்கு குறைந்தபட்சம் 24 பாடவேளைகள் எனவும். இதர அனைத்து பாட ஆசிரியர்களுக்கு வாரத்திற்கு குறைந்தபட்சம் 28 பாடவேளைகள் என்ற அடிப்படையிலும் கணக்கீடு செய்ய வேண்டும்.

<u>கூடுதல் தேவை பணியிடங்கள்</u>

மொழிப் பாடத்தில் 24 பாடவேளைக்கும், முதன்மை பாடத்தில் 28 பாட வேளைகளுக்கும் கூடுதலாக இருப்பின் அதன் விவரம் இணைக்கப்பட வேண்டும்.

1. 01.06.2024 நிலவரப்படி மேம்படுத்தப்பட்ட (Update) அளவைப் பதிவேட்டில் நகல் இருநகல்களில் (Legal Size Only) இணைக்கவும்.

2. 01.08.2024 நிலவரப்படி பணியாளர் நிர்ணயம் செய்யப்படுவதற்கு EMIS இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கை சார்ந்த விவரங்களை பதிவிறக்கம் செய்து (Download) இரண்டு நகல்களில் (Legal Size Only) இணைக்கவும்.

3. இணைப்பில் உள்ள படிவங்களை எவ்வித தவறுதலுமின்றி பூர்த்தி செய்து உரிய இணைப்புகளுடன் ஒரு நகலில் அனுப்ப தெரிவிக்கப்படுகிறது.

4. கணினி பயிற்றுநர் நிலை –1 சார்ந்த பணியிடம் விவரம் சேர்க்கப்பட்டுள்ளது.

மேற்காண் அறிவுரைகளை தவறாது பின்பற்றி 01.08.2024 நிலவரப்படி மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் அனைத்துவகை அரசு/நகராட்சி மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் முதுகலை ஆசிரியர்கள் சார்பான பணியாளர் நிர்ணய விவரங்களை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் பூர்த்தி செய்து இரு நகல்களில் கீழ்காணும் அட்டவணையின்படி ஒன்றியம் வாரியாக இவ்வலுவலக அ.4. பிரிவில் அளவுகோல் பதிவேட்டுடன் தனிநபர் மூலம் நேரில் ஒப்படைக்குமாறு அனைத்து அரசு/நகராட்சி மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

| வ.எண் | ஒன்றியத்தில் அரசு மேல்நிலைப்பள்ளிகள் | தேதி |
|---|---|---|
| 1 | காட்பாடி | 19.08.2024 முற்பகல் |
| 2 | கணியம்பாடி | 19.08.2024 பிற்பகல் |
| 3 | வேலூர் (நகர் , புறநகர்) | 20.08.2024 முற்பகல் |
| 4 | கே.வி.குப்பம் | 20.08.2024 பிற்பகல் |
| 5 | குடியாத்தம் | 21.08.2024 முற்பகல் |
| 6 | பேர்ணாம்பட்டு | 21.08.2024 பிற்பகல் |
| 7 | அணைக்கட்டு | 22.08.2024 முற்பகல் |

22.08.2024 அன்று நேரில் ஒப்படைக்கவும். தவறும்பட்சத்தில் 23.08.2024 அன்று காலதாமதத்திற்கான விளக்கத்துடன் கருத்துருவினை ஒப்படைக்குமாறு அனைத்து அரசு/நகராட்சி மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு :

படிவம் – Form 1, Form 2, 2C, 2D, 2E, 2F, Pg staff fixation, Form 3

//ஒப்பம் //
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்,
தலைமை ஆசிரியர்கள்,
அரசு / நகராட்சி / மேல்நிலைப் பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்,